[1995 ஏப்ரல் 25

432—

கள்ளக் குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை

***24250** திரு. ஆர்.பி. பரமசிவம்:

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சி-2 கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் நிர்மாணப் பணி முடிந்து எப்பொழுது ஆலை செயல்படத் தொடங்கும்?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம் கச்சிராப்பாளையத்தில் நிறுவப்பட இருக்கும் கள்ளக்குறிச்சி:2 கூட்டுறவு சர்க்கரை ஆலைக்குத் தேவையான 98 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டுள்ளது. இந்த ஆலையின் நிர்மாணப் பணிகள் நடந்து வருகின்றன. ஆலையின் சோதனை ஓட்டம் 95-96 கரும்பு அறவைப் பருவத்தின் இறுதியில் தொடங்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ஆர்.பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று காலை வரை கள்ளக்குறிச்சி-2 என்று அழைக்கப்பட்ட அந்தக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, இதய தெய்வத்தினுடைய தாயின் பெயரால் இன்று முதல் அன்னை சந்தியா கூட்டுறவுச் சர்க்கரை ஆலை என்று அழைக்கப்படுகின்ற நிலையினை உருவாக்கிக் கொடுத்த மாண்புமிகு தொழில்துறை அமைச்சரவர்களுக்கு மீண்டும் என்னுடைய நன்றியைக் கூறி, இந்தக் கோரிக்கையை என்னுடைய மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும், எங்களுடைய மாவட்டத்தினுடைய அனைத்துப் பெருமக்களும்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்றே நன்றி சொல்லியிருக்கிறீர்கள். கேள்வியைக் கேளுங்கள்.

திரு. ஆர்.பி. பரமசிவம்: விருப்பத்தின்படி என்னுடைய கோரிக்கையை ஏற்று இந்தப் பெயரை வைத்தமைக்கு என்னுடைய மாவட்டத்தின் சார்பாக நன்றியைக் கூறி, அந்த அன்னை சந்தியா கூட்டுறவு சர்க்கரை ஆலை கட்டுமானப் பணிக்கு அரசு ஒப்பந்தங்கள் விடப்பட்டனவா? அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் எப்போழுது வேலை தொடங்கும் என்பதனை மாண்புமிகு அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

1995 ஏப்ரல் 25]

மாண்புமிகு திரு.ம. சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, கட்டுமானப் பணிகளுக்கு ஒப்பந்தம் விடப்பட்டு இப்பொழுது அந்த ஒப்பந்தப் புள்ளிகள் எல்லாம் கோரப்பட்டு பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் அந்த ஒப்பந்தம் முடிவு செய்யப்பட்டு கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர்.பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்காமலே தருகின்ற ஆட்சியைப் பெற்றிருக்கின்ற நாம் ஒவ்வொரு தொகுதிக்கும் நம்முடைய இதய தெய்வம் அவர்கள் கேட்காமலே திட்டத்தை அறிவிக்கிறார்கள். அந்த வகையில் அன்னை சந்தியா கூட்டுறவு சர்க்கரை ஆலை கடந்த 3,4 ஆண்டுகளாக அந்தக் கரும்பைப் பிழிகின்ற நிலைமை ஏற்படாமல் இருந்தாலும் ஆண்டாண்டு தோறும் 15,20,25 இலட்சங்களை இலாபமாகப் பெற்றிருக்கிறது. ஆகவே, வருகின்ற அறவைப் பருவத்திற்கு அந்த ஆலையைத் தயார் செய்து தர முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆலைக்கு கள்ளக்குறிச்சி வட்டத்தில் 5 பிர்க்காக்களே விளையும் சுமார் 4 இலட்சம் டன் கரும்பு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தக் கரும்பெல்லாம் பக்கத்திலே கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் இப்பொழுது அறவை செய்யப்பட்டு வருகிறது. அடுத்த 95-96 ஆம் ஆண்டு கரும்பு அறவைப் பருவத்தின் முடிவில் சோதனை ஓட்டம் தொடங்கப்பட்டு பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 433, திரு. தா. வேடியப்பன், மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

433—

போளூர் ஒன்றியத்தில் சத்துணவு மையம் அமைத்தல்

*** 36601** திரு. தா. வேடியப்பன்:*

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் ஒன்றியத்தில் புதியதாக புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு மையங்கள் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், கணேசபுரம், சோழங்குப்பம், முனியன்குடிசை, செட்டியபுரம் போன்ற பகுதிகளுக்கு விரிவுபடுத்தப்படுமா?